# காரை ஒளி

திருவெம்பா வெளியீடு
ஆனந்த - கார்த்திகை - மார்கழி
ஒளி - 6
சுடர் - 11

கருத்து

## கடமையும் உரிமையும்

காரை அபிவிருத்திச் சபையின் நிதி நிலை பற்றி அச்சபையின் புதிய பொருளாளர் விடுத்திருக்கும் அறிக்கை, சபையின் அபிவிருத்தித் திட்டங்கள் செயலாக்கம் பெறுமலிருப்பதற்கான காரணிகளைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. ஊர் முன்னேற்றம் கருதி உருவாக்கப்பட்ட சபையின் நிதிப் பலம் நீண்டகாலமாக திருப்தியற்ற நிலையிலிருந்து வந்திருக்கிறது. ஓர் சபை இருக்கிறது என்ற பெயரளவில் இயங்குவதானுல் நிதி நிலை பற்றி கவலைப்பட வேண்டியிரா. ஆனுல் சபையின் அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றும் கட்டத்தை அடைந்திருக்கும் சபை நிதியைப் பற்றிச் சிந்திக்கவேண்டியது அவசியமாகும்.

புதிய திட்டங்கள் பலவகுக்கப்பட்டு புதிய காரை இளைஞர்கள் மீது பெரும் பொறுப்புக்கள் சுமத்தப்பட்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் சம்பந்தப்பட்ட பாரிய பொருளாதாரத் திட்டங்களைப் பயனுள்ளதாக்கப் பெருந்நிதி தேவை. இதைத் தேடிக் கொடுக்கும் பணி பொருளாளருடைதாகும். அதற்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டிய கடமையும் உரிமையும் உங்களுடையதாகும்.

யார் செய்தாலும் காரைநகரின் முன்னேற்றத்திற்கே என்ற உணர்வு எல்லோரிடத்திலும் ஏற்படவேண்டும்.

காரைநகர் அரசினர் வைத்தியசாலையை விரிவுபடுத்துவதற்கு ஓர் கட்டிடம் கட்டி உதவ காரை அபிவிருத்திச் சபை தீர்மானித்தது. அதற்காக "நம்பிக்கை நாடகத்தைக் காரைநகரில் நடத்த நம்பிக்கை கொண்டது. ஆனுல் நடராசா மண்டபத்தைக் காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் தர மறுத்ததால் நம்பிக்கை இழந்துவிட்டார்கள்.

எனினும் மேன்மேலும் பல வழிகளில் நிதியைப் பெருக்க சபை முனைந்துள்ளது மகிழ்ச்சிக்குரியதே. அதற்கு ஆதரவுஅளிக்க வேண்டியது உங்கள் கடமையும் உரிமையாகும்.

# எங்கு வாழ்ந்தாலும் பிறந்த நாட்டை மறவோம்!

டாக்டர் சிவசோதி

காரைநகருக்கு மட்டுமன்றி இலங்கைக்கே பெருமை தேடித்தரக்கூடிய பல காரைநகர் அறிஞர்கள் வெளிநாடுகளில் பல்வேறு துறைகளில் பணியாற்றி வருகின்றுர்கள். அவர்களில் ஒருவர்தான் டாக்டர் சிவசோதி அவர்கள். தற்போது சாம்பியா நாட்டில் வைத்தியம் பணி புரிந்து வரும் இவர் அண்மையில் இலங்கை வந்திருந்தார். காரை அபிவிருத்திச் சபையின் சார்பில் கலந்துரையாடல் ஒன்று பம்பலப்பிட்டி கிறீன்லன்ஸ் ஹோட்டலில் 19-10-74 ந் திகதியன்று நடைபெற்றது. காரைநகர் மக்கள் பலர் கலந்து கொண்ட கலந்துரையாடலின்போது, சாம்பியா நாட்டில் பொருளாதார வளர்ச்சி பற்றி டாக்டர் சிவசோதி விபரமாகக் குறிப்பிட்டார், தாங்கள் வெளிநாடுகளில் வாழ்ந்தாலும், பிறந்த நாட்டை நினைக்கும்போது இன்பமாகவிருக்கிறது என்றுர். எங்கு வாழ்ந்தாலும் பிறந்த நாட்டை மறவோம். அதன் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விருப்போம் என்று அவர் கூறியது எமக்கெல்லாம் பெரும் தெம்பை அளித்தது. சபைத்தலைவர் திரு. ஆ. ச. ச. இராசரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், திரு. பொ. வன்னியசிங்கம், காரைநகர் வடக்கு முன்னுள் கிராமச்சங்கத் தலைவர் திரு. செல்லப்பா வேலுப்பிள்ளை, ஐ. இ. சம்பந்தர் ஆகியோர் காரை அபிவிருத்திச் சபையின் பணிகள் பற்றியும், பொருளாதாரத்திட்டம் பற்றியும் பேசினுர்கள்.

# தலைவர் சொல்லுகிறார்...!

பொதுப் பணியாற்றி வரும் நிறுவனங்களின் இலட்சியங்களையும், நோக்கங்களையும் பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். பொதுமக்களின் ஒத்தாசையைப் பெறாத எந்த இயக்கமும் வெற்றிகரமாக செயற்பட முடியாது. எனவேதான் அவ்வியக்கம் பற்றிய கருத்துக்களைப் பொதுமக்களிடமே பரப்ப வேண்டும்.



பல வருடங்களாகச் செயற்பட்டுவரும் காரை அபிவிருத்திச் சபையின் இலட்சியங்கள், நோக்கங்கள், பணிகள் பற்றி பொதுமக்கள் குறிப்பாக காரைநன்மக்கள் அறிந்து கொள்தலவசியம். பாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவிருக்கும் இச் சபையின் பணிகள் பற்றிய பிரசாரம் செய்யப்படல் வேண்டும். இந்நாட்டின் நாளிதழ்கள் இச்சபையின் பணிகளுக்கு போதிய ஆதரவு நல்கிவந்த போதிலும், முழுமையான பிரசாரத்தை காரைநகர் மக்களிடையே மேற்கொள்வதற்கு வேறு சில வழிகளையும் கையாளவேண்டியது அவசியமாகிறது.

எம்து சபையின் வெளியீடான "காரை ஒளி"யை நிரந்தர பிரசார கருவியாக ஆக்குவதென தீர்மானித்துள்ளோம். காரைநகர் இல்லங்கள் தோறும் "காரை ஒளி" பிரகாசிக்க வேண்டும். காரைநகருக்கு வெளியில் வாழும் காரைவாசிகளின் கரங்களில் காரை ஒளி தவழ வேண்டும். காரைநகர் மக்கள் ஒவ்வொருவருக்கும் "காரை ஒளி" கிடைக்கக்கூடியதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் உங்கள் முன் சமர்ப்பிக்கப்படும்.

காரைநகர் மக்கள் எல்லோரையும் "காரை ஒளி" சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவு அளிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

# ஊர் செய்திகள்!

காரைநகர் சிநோர் நிறுவனத்தினர் காரைநகர் றெட்பார்ன சௌக்கிய நிலையம் ஒன்றைக் காரைநகர் துறைமுகத்தில் நிறுவியுள்ளனர். இந்நிலையத்தை சுகாதார அமைச்சர் மாண்புமிகு பீ. ஜீ. ஆரியதாசா அவர்கள் 13-10-74ந் திகதியன்று திறந்துவைத்துள்ளார்கள்.

இந்நிறுவனத்தினர் பொன்னாலைச் சந்திக்கு அருகாமையிலுள்ள திறந்த வெளியில் வலைபின்னும் தொழிற்சாலை ஒன்றை நிறுவவுள்ளனர். இதனால் சிநோர் திட்டத்தின் கீழ் பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

- காரைநகர் வடக்கில் நெற்காணி வைத்திருக்கும் விவசாயிகளுக்கு காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் விதை நெல் வழங்கப்பட்டது.
- காரைநகர் குழாய்நீர் திட்டத்திற்கான அடிக்கல் வட்டு எம். பி. திரு ஆ. தியாகராசா அவர்களினால் நாட்டப்பட்டது.
- காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம் கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (க. பொ. த) வகுப்பு மாணவர்களுக்கு தமிழ்மொழி மதிப்பீட்டுப் பயிற்சி வினாக்களைத் தயாரித்தளித்து நற்பணியாற்றி வருகிறது. இது வரையும் வெளிவந்த கேள்விகளின் தொகுப்பு ஒன்றை அச்சிட்டு வெளியிடவுள. இலங்கையிலுள்ள சகல மாணவர்களுக்கும் இது பெரிதும் பயன்படும்.

# பொங்கல் மலர் - 1975

பொங்கல் மலரை மிகச்சிறந்த மலராக வெளியிடுவதற்கான ஆயத்தங்கள் யாவும் இப்பொழுதிருந்தே மேற்கொள்ளப்படுகிறது. தமிழர் திருநாள் பற்றி ஈழத் தமிழ் அறிஞர்களின் படைப்புகள் பல இடம் பெறுகின்றன. காரைநகரில் வாழ்ந்து மறைந்த ஐந்து பெரியோர்களின் வாழ்க்கை குறிப்பு - சிறந்த பொருளாதார கட்டுரைகள், மற்றும் பல புதிய அம்சங்களுடனும் மூவர்ண முகப்புடனும் வெளிவரும் இம்மலர் காரைநகரின் பெருமையை துலங்க வைக்கும் ஒரு நூலாக விளங்கும் பிரதிகள் வேண்டுவோர் முற்கூட்டியே விண்ணப்பித்துக் கொள்ளல் வேண்டும்.

சகல விபரங்களுக்கும்:

ஆசிரியர் "காரை ஒளி"
98, விவேகானந்தர் மேடு,
கொழும்பு-13.

# REDD BARNA HEALTH CENTRE - KARAINAGAR

This Health Centre is a gift to Sri Lanka from Redd Barna (Save the Children Norway).

The equipment and the running expenses and maintenance until the Deparment Health takes over would be from donation from Norway.

The initiative to start the Health Centre and the first donation of Rs 450,000/- came from NGU (Norwegian - Good Templar Youth Federation) who is the Organisation behind the Cey - Nor Development Foundation.

The total value of building and equipment exceeds Rs. 10 lakhs

The Redd Barna is a private, humanitarian Organization, non - political and non-religious and a part of the Save the Children World Organization, whose task is to take care of suffering children all over the world irrespective of race, faith or political views.

The Redd Barna Health Centre, Karainagar will serve the people from South, East & West Karainagar with the following activities:

1. Out - patient clinic
2. Child Welfare Clinic
3. Antenatal Clinic
4. Maternity Ward
5. Family Planning
6. Ward & Nutrition Rehabilitation Centre for Small Children

Drugs and Treatment will be given free of costs to all,

In - door patients will be given free food.

All are welcome to the Services of the Health Centre.

TO BOEYESEN
Chairman of Redd Barna, Norway.

# பனையை வளர்த்து பயன் பெறுவோம்

திரு க. கனகராசா ஜே.பி.

நம்மைப் பஞ்சமும் பிணியும் பீடிக்காமல் நாம் நம்மைப் பாதுகாத்தல் வேண்டும். அதற்குச் சிறந்த வழி நாம் பனையைப் பாதுகாத்தலாகும். பனை பூவுலக கற்பதரு. அது நமக்கு வேண்டிய எல்லாவற்றையும் தருவது. நாம் இதுகாறும் நன்றி கெட்டவர்களாய், அளவு கணக்கின்றி எம் செல்வப் பயிரான பனையை எதிர்காலத்தை எண்ணாமல் தறித்து வந்தோம். தறித்த அளவுக்குப் பனையை நட்டோமில்லை. இனிமேலாவது சிந்தித்து எம் எதிர் காலத்துக்கு நம்மை செய்வோமாக.

எக்காரணத்தைக் கொண்டும் பெண்பனைகளைத் தறிக்காமல் காப்போம். வேண்டியபோது அளவறிந்து ஆண் பனைகளைத் தறிப்போம். அவற்றைத் தறிக்குமுன் பனை விதைகளை நாட்டுவோம். நாம் ஏராளமாகப் பனைகளை உண்டாக்குதல் வேண்டும். உள்ள பனைகளைச் செழுமையாக வளர்வதற்கு மழை நீரை மறித்துக் கட்டி விடுவோம் அதனடியில் குப்பை கூழங்களையிட்டுக் கொத்திப் பசளையாக்குவோம்.

வெறுங் காணிகளில், வேறு எப்பயிர்களும் செய்யாமற் கிடக்கும் காணிகளில் பனம் விதைகளைப் பருவ காலங்களில் நிரை நிரையாக நட்டுப் பனந் தோப்புக்களை உண்டாக்குவோம். பனை பன்னிரண்டு ஆண்டுக் காலத்திற் பயன் தரும். அதற்கு முன்னரே வடலி ஓலை, மட்டை, கங்கு ஆகிய பயன்களைத் தந்துதவும்.

கங்கு மட்டையில் அற்புதமாகத் தும்பு தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நிய செலாவணியை மிச்சம் பிடிக்கலாம். இக்காலத்துத் தச்சுவேலை ஆயுதங்களைக் கொண்டு பனை மரத்தில் நவீன தளபாடங்கள், விளையாட்டுப் பொருள்கள் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பலாம். பணந் தேடலாம்.

பனம் பழக்காலத்தில் கிடைக்கக் கூடிய பழங்களில் இருந்து பனாட்டு, பாணிப்பனாட்டு, பழப்பாணி, ஜாம் சர்பத்துப் பாணி முதலியன செய்யலாம், பனாட்டைப் பக்குவமாக வைத்திருந்து தேனீரருந்தும்போது சீனிக்குப் பதிலாக உபயோகிக்கலாம்.

வெயில் மிகுந்த வேளையில் சர்பத்துப் பாணியில் நீர் கலந்து பருகலாம். பனம் பண்டங்கள் எம் உடலுக்கு ஒத்துப் போவன. உறுதியளிப்பன.

பனை வளர்த்தால் நமக்குக் கேடொன்றும் இல்லை என்பதை உறுதியாக நம்புவோம். பனையை அதிகமாகப் பயிரிடுவதற்கு இன்றே தொடங்குவோம். இது நல்ல தருணம்.

## ஈழத்துச் சிதம்பர தேர், தீர்த்த நிகழ்ச்சிகள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படும்

சரித்திரப் பிரசித்திபெற்ற காரைநகர் சிவன்கோவில் (ஈழத்துச் சிதம்பரம்) தேர், தீர்த்த நிகழ்ச்சிகளை (டிசம்பர் 28ம்,29ம் திகதிகள்) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இம்முறை நேரடியாக ஒலிபரப்பும்,

இப்பணியில் முன்னின்று உழைத்த காரை அபிவிருத்திச் சபையின் காப்பாளர் திரு. ச. க. பொன்னம்பலம் அவர்களுக்கு எங்களது பாராட்டுக்கள்.

# காரை அபிவிருத்திச் சபையின் புதிய பொருளாளர் திரு. கா. சண்முகராசா அவர்களின் உருக்கமான வேண்டுகோள்!

காரை அபிவிருத்திச் சபை பயனுள்ள திட்டங்கள் பல வகுத்திருந்தபோதிலும் நிதியின்மையால் செயற்படாதிருப்பதை நான் சபைப் பொருளாளராக இவ்வாண்டு பதவி ஏற்ற பின்னர் காணக்கூடியதாகவிருந்தது. நீண்டகாலமாகச் செயற்பட்டுவரும் சபையில் நிரந்தரச் சொத்துக்கள் எதுவும் இடையாது. நிரந்தரமான சொந்த அலுவலகமும் கிடையாது. முழு நேரப் பணியாளர் எவரும் இல்லை. இடாப்பிலுள்ள உறுப்பினர் தொகை இருநூற்றுக்கு மேலாகவிருந்த போதிலும், நாளதுவரையும் ஒழுங்காக உறுப்புரிமை செலுத்தப்பட்ட தொகை மிகக் குறைவு. இதனால் உறுப்புரிமையால் வரும் வருவாயும் குறைந்து விட்டது. நிரந்தர வருவாய் தரக் கூடிய வளங்கள் எதுவும் சபைக்கு இல்லை. இந்நிலைமைகள் யாவற்றையும் காரைநகர் மக்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

இச்சபையின் நிதியைப் வளர்க்க வேண்டிய பொறுப்பு இளைஞர்களாகிய எங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. காரைநகர் பெருமக்களின் பேராதரவு கிடைக்குமென்ற நம்பிக்கையால் இப்பொறுப்பினை ஏற்றுள்ளோம்.

காரைநகரின் முன்னேற்றத்திற்கு பல ஆக்கபூர்வமான பணிகளாற்றக்கூடிய சபை பண நெருக்கடியினால் மெலிந்து தெரிந்து போகாது பாதுகாப்பதற்கு பின்வரும் திட்டங்களை உடன் அமுல் நடத்துவதற்கு திட சங்கற்பம் கொண்டுள்ளோம்.

1. உறுப்பினர்களின் பாக்கித் கொகையை அறவிடுதலும் புதிய உறுப்பினர்களைச் சேர்த்தலும்.

2. நாடகம், நிதியுதவிக்காட்சி, நன்கொடைகள் மூலம் நிதியை வளர்த்தல்.

3. "காரை ஒளி" வளர்ச்சி நிதி இயக்கம்.

இத்திட்டங்கள் செயலாக்கம்பெற காரை நன் மக்களின் பேராதரவை வேண்டி நிற்கிறோம்.

# காரைநகர் றெட் பார்ன சௌக்கிய நிலையம்

இந்த சௌக்கிய தாபனம் இலங்கைக்கு றெட் பார்னாவின் (குழந்தைப் பாதுகாப்பு - நோர்வே) நன்கொடையாகும்.

இலங்கை சௌக்கியப்பகுதி பொறுப்பேற்கும் வரை இதன் தளபாடங்களும், நடைமுறைச் செலவுகளும், பராமரிப்புச் செலவுகளும் நோர்வே நாட்டின் அன்பளிப்புக்களினால் நடாத்தப்படும்.

இந்த சௌக்கிய தாபனத்தை ஆரம்பிப்பதற்கான ஊக்கமும் முதலாவது நன்கொடையான ரூபா 450,000/-ம் சீ-நோர் அபிவிருத்தி அமைப்பிற்கு ஆதாரமான என்ஜியூ (நோர்வே நல்லொழுக்க இளைஞர் சம்மேளனம்) விடமிருந்து கிடைத்தது.

இக்கட்டடத்தினதும், தளபாடங்களினதும் மொத்தப் பெறுமதி ரூபா 10 இலட்சத்திற்கு அதிகமாகும்.

றெட் பார்ன சாதி, சமய, அரசியல் நோக்குகளின்றி அகில உலகிலும் அல்லற்படும் குழந்தைகளைக் காப்பாற்றுவதைக் கடமையாகக் கொண்ட குழந்தைகள் பாதுகாப்பு உலக இயக்கத்தின் அங்கமான அரசியல், சமயக் கலப்பற்ற, தனிப்பட்ட, மனிதாபிமான அமைப்பாகும்.

காரைநகர் றெட்பார்ன சௌக்கிய தாபனம் பின்வரும் விடயங்களில் காரைநகர் தெற்கு, கிழக்கு, மேற்குப் பகுதி மக்களுக்குச் சேவை செய்யும்.

1. வெளிநோயாளர் சிகிச்சை நிலையம்
2. குழந்தை நலன் சிகிச்சை நிலையம்
3. கர்ப்பிணிகள் சிகிச்சை நிலையம்
4. பிரசவப் பகுதி
5. குடும்பத் திட்டம்
6. குழந்தைகள் பகுதியும் குழந்தைகளுக்கான போஷாக்கு: புனர்வாழ்வு நிலையமும்.

மருந்துகளும், பராமரிப்பும் எல்லோருக்கும் இலவசமாக அளிக்கப்படும்

உள்நோயாளருக்கு உணவு இலவசமாக வழங்கப்படும்.

சௌக்கிய நிலையத்தின் சேவைகளுக்கு எல்லோரும் அழைக்கப்படுகின்றனர்.

ரொர் பொய்சன்
தலைவர், நோர்வே றெட் பார்ன

இரஞ்சனா அச்சகம்,
98, விவேகானந்தர் மேடு, கொழும்பு-13.